


# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரி சாராத பீடத்தின் 34வது பீடாதிபதியான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் 71வது ஆராதனை (21st செப்டம்பர் 2025)

## ஸ்ரீ சிருங்கேரி சாராத பீடத்தின் 34வது பீடாதிபதியான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் 133வது ஜயந்தி மஹோத்ஸவம் (17th அக்டோபர் 2025) (1892-1954)

## சிறப்பு இதழ்




### ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

தனக்கு நல்லதெது என்பதைத் தெரிந்துகொள்ள மனிதன் எப்பொழுதும் ஆவலுடன் இருக்கவேண்டும். அவனுக்கு ஸ்ரேயோ மார்க்கத்தை எடுத்துக்கூற சாஸ்த்ரங்கள், இதிஹாஸ புராணங்கள் எல்லாம் இருக்கின்றன. இக்காலத்தில் அவற்றைத் தானாகவே படித்துத் தெரிந்து கொள்வது அவ்வளவு எளிதல்ல. நேரமும் கிடைப்பதில்லை. ஆகையால் பெரியோர்களிடமிருந்து கொஞ்சம்கொஞ்சமாக சாஸ்த்ரத்திலுள்ள ஸூக்ஷ்ம விஷயங்களைத் தெரிந்துகொள்வதுதான்

நல்லது. தீவ்ரமான கடவுள் நம்பிக்கை இருந்தால் விரைவில் கடவுளே அவனுக்கு ஞான குருவாக வந்து ஸ்ரேயோ மார்க்கத்தை அருளுவார். அப்பொழுது அவன் உலகத்தை ஒரு கனவுபோல் உணர ஆரம்பித்துவிடுவான். கர்மாக்கள், அதன் பலன்கள், அவற்றை அனுபவிப்பதற்கான புனர்ஜன்மங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு விடுவான். குரு மூலமாக ஸூக்ஷ்மமான வேதாந்த விஷயங்களை படிப்படியாக அவனால் அனுபவத்திற்குக் கொண்டுவர முடியும். ஆனால், அதுபோன்ற ஜிஞாஸு (அறிந்து கொள்ள ஆவலுள்ளவன்) முதலில் தன்னை குருவின் அனுக்ரஹத்திற்கு பாத்திரமாக்கிக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக ஸூர்ய கிரகணத்தால் நிஜமான தாமரை மொட்டுத்தான் விகஸிக்கும். கட்டை அல்லது கல்லாலான தாமரை மொட்டல்ல. அதேபோல் தீவிரமான குருபக்தியால் குருஸேவை செய்துவந்து குருவின் அனுக்ரஹத்திற்கு பாத்திரமானவனில்தான் ஆர்மபோதம் உதயமாகும் அனுபவத்திற்கும் வரும்.

**यद्यप्युदयने भानोर्यथा पद्मं प्रकाशते ।**
**न काशन्ते तथा पद्माः काष्ठपाषाणमृण्मयाः ॥**
**प्रकाशको रविर्यद्वत्पद्ममेव विकासयेत् ।**
**गुरुस्तथा बोधकः सच्छिष्यमेव प्रबोधयेत् ॥**
**யத்³யப்யுத³யனே பா⁴னோர்யதா² பத்³மம்’ ப்ரகாஶதே |**
**ந காஶந்தே ததா² பத்³மா: காஷ்ட²பாஷாணம்ரு’ண்மயா: ||**
**ப்ரகாஶகோ ரவிர்யத்³வத்பத்³மமேவ விகாஸயேத் |**
**கு³ருஸ்ததா² போ³த⁴க: ஸச்சி²ஷ்யமேவ ப்ரபோ³த⁴யேத் ||**

இதை நன்றாகப் புரிந்துகொண்டு குருவின் அனுகிரஹத்திற்கு பாத்திரராக வேண்டுமென்று எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## மனுஷ்ய ஜன்மத்தின் மேன்மை


**(ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்)**

**(உபதேச ரத்ன மாலா)**

ஜந்தூனாம் நரஜன்ம துர்லபமத: பும்ஸ்த்வம் ததோ விப்ரதா
தஸ்மாத் வைதிக தர்மமார்கபரதா வித்வத் த்வமஸ்மாத்பரம் |
ஆத்மானாத்ம விவேசனம் ஸ்வனுபவோ ப்ரஹ்மாத்மனா ஸம்ஸ்த்திதி:
முக்திர்நோ சதகோடி ஜந்மஸு க்ருதை: புண்யைர் விநா லப்யதே ||

பிராணிகளுக்கு பூர்வகர்மானுஸாரமாகவே பலவித ஜன்மங்கள் ஏற்படுகின்றன என்பது சாஸ்த்ர ஸித்தாந்தம். அப்படிக்கன்னியில் ஈசுவரன் தானாகவே தன் இஷ்டப்படி பிராணிகளுக்கு ஜன்மங்களைக் கொடுக்கிறார் என்றால், அவருக்கு வைஷம்யம் (பக்ஷபாதம்) நைர்கிருண்யம் (தயவின்மை) என்ற இரண்டு தோஷங்கள் அவசியம் ஏற்படும். ஆகையால் கர்மானுஸாரமாய்த் தான் ஜன்மங்கள் கிடைக்கின்றன என்று ஒப்புக்கொள்ள வேண்டி வருகிறது. திருஷ்டாந்தமாக ஒரு ராஜா தன்னுடைய ஸேவகர்களுக்கு யோக்கியதானுஸாரமாகவே அதிகாரம் கொடுக்கின்றானல்லவா? தன் பிரஜைகள் எல்லாரிடத்திலும் ஸமமான பிரீதி அவனுக்கு இருந்தாலும், எல்லோரையும் ஸமமாக ஸம்மானிக்கிறானா? இல்லையே! அவரவர்களுடைய யோக்கியதையை அனுஸரித்துத் தானே அதிகாரங்களோ சம்பளங்களோ கொடுக்கிறான்? இப்படிச் செய்வதால் அவனை யாராவது நிந்திக்கிறார்களா? இவ்விதம் செய்யாமல் போனால்தான் அவன் நிந்தைக்கு பாத்திரமாகிறானே தவிர, முன் சொன்ன மாதிரி நடந்தால், அவனை எல்லோரும் கொண்டாடுகிறார்கள். அதேமாதிரி ஈசுவரனும் நமக்கு நம்முடைய கர்மானுஸாரமாய்த் தேஹங்களைக் கொடுக்கிறார். இப்படி நமக்குக் கொடுக்கப்படும் ஜன்மங்களில் நாம் இப்பொழுது அடைந்திருக்கும் மனுஷ்ய ஜன்மமே சிரேஷ்டம் என்று நமது ஸ்ரீமத் ஆசார்யாள் விவேகசூடாமணியில் ஆரம்பத்திலேயே எடுத்துக்காட்டுகிறார்கள்.

மனுஷ்ய தேஹம் இதர திர்யக் (விலங்குகள்) ஜந்துக்களைப் பார்க்கிலும் சிரேஷ்டமென்று யாரும் எளிதில் ஒப்புக் கொள்வார்கள். ஏனென்றால், பசுக்களுக்கு ஸ்வாதந்திரியம் இல்லை, அவைகளுக்கு கர்மானுஷ்டானத்தில் அதிகாரம் கிடையாது, அவைகளுக்கு ஒரு கார்யம் நல்லது கெட்டது என்று அறிய யோக்கியதை இல்லை. அதனாலேயே அவைகளுக்கு பாவம் புண்யம்





என்பதும் கிடையாது. ஆகையால் பசு ஜன்மத்தைப் பார்க்கிலும் மனுஷ்ய ஜன்மம் சிரேஷ்டமென்பது நிச்சயமாகிறது. தேவ கந்தர்வாதி ஜன்மங்கள் மனுஷ்ய ஜன்மத்தை விட மேலானதாயிருக்க, அவைகளை ஏன் சிரேஷ்டமாகச் சொல்லவில்லை? அவர்களுக்கு விசேஷமான ஸுகம் இருந்தும் சிரேஷ்டமாக ஏன் சொல்லவில்லை? தேவதைகளுக்கு அவர்களின் லோகத்தில் கர்மம் செய்ய முடியாமலிருப்பதே காரணம். அவர்கள் கர்மம் செய்ய வேண்டுமானால் இந்த பூலோகத்தில் வந்துதான் அதைச் செய்ய வேண்டும். இதனால்தான் நம் தேசத்தில் இந்த இடத்தில் இந்திரன் தபஸ் செய்தான், இந்த இடத்தில் பிரஹ்மா யாகம் செய்தார் என்று அநேக ஸ்தலங்கள் காட்டப்படுகின்றன. கேரள தேசத்தில் ஜனார்த்தனம் என்ற திவ்ய க்ஷேத்ரம் ஒன்று இருக்கிறது. அதன் ஸமீபத்திலுள்ள மலையின் உச்சியில் பிரஹ்ம குண்டம் என்று ஓர் இடம் காட்டுகிறார்கள். அங்கு பிரஹ்மா வந்து யக்ஞம் செய்ததாகச் சொல்கிறார்கள். இப்படியே அநேக இடங்கள் இருக்கின்றன. தேவதைகளும் கர்மம் செய்யவேண்டி வந்தால் இந்த லோகத்திற்கு வந்தே தீரவேண்டும். அதனால்தான் இதற்கு கர்மபூமி என்ற பெயர் வந்திருக்கிறது. அதனால்தான் தேவர்கள் இங்கு வந்து யக்ஞாதி கர்மாக்களைச் செய்ததாகச் சொல்லியிருக்கிறது. அவர்கள் ஏன் இங்கு வருகிறார்கள் என்றால்

க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே ஸித்திர் பவதி கர்மஜா

என்று சொல்லியிருக்கிறபடி இந்த லோகத்தில்தான் சீக்கிரம் ஸித்தி அடைய மார்க்கம் இருக்கிறது. அதிலும் விசேஷமாக இந்த பரத கண்டத்தில் வெகு சீக்கிரத்தில் பலனை அடையலாம். ஆகையால்தான், தேவ ஜன்மத்தைப் பார்க்கிலும் மனுஷ்ய ஜன்மமே துர்லபமென்று கருதப்படுகிறது.

நமக்கு எத்தனையோ ஜன்மங்கள் வந்தாயிற்று. இன்னம் முக்தி ஏற்படவில்லை. ஸம்ஸார பந்தம் ஒழியவில்லை. ஞானம் வரவில்லை. இன்னும்


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

எத்தனை ஜன்மங்கள் ஏற்படவேண்டுமோ என்பதை நமக்கு ஞாபகமூட்ட வேண்டியதற்காகவே நமது ஸங்கல்பத்தில் தத்காலமுள்ள பிரஹ்மாவின் ஆயுட்காலத்தில் சுவேதவராஹ கல்பத்தில் வைவஸ்வத மன்வந்தரத்தில் இருபத்தி எட்டாவது கலியுகத்தில் இந்த வருஷத்தில் என்று சொல்லும்படி பெரியோர்கள் திட்டப்படுத்தி இருக்கிறார்கள். இத்தனை காலமாக நாமும் இருந்திருக்கிறோம். இன்னும் ஞானம் வரவில்லை. ஞானம் ஸம்பாதிக்கும் மார்க்கத்தில் கூட நாம் இறங்கவில்லை. இவ்வளவு காலமாக நமக்கு எத்தனை ஜன்மாக்கள் கிடைத்தனவோ. இனி மேலும் எந்த ஜன்மா வரப்போகிறதோ, ஆகையால் சிரேயஸ்ஸை ஸம்பாதனம் செய்வதற்கு அனுகூலமாயிருக்கும் மனுஷ்ய ஜன்மா கிடைப்பது அரிது என்று ஸ்ரீமத் ஆசார்யார் சொல்கிறார்.

ஜன்மம் வந்ததற்கு கர்மாதான் காரணம். அந்த கர்மாவை செய்வதற்கு முந்திய ஜன்மத்தில் அவசியம் சரீரம் எடுத்திருக்கவேண்டும். ஆகையால், கர்மமில்லாமல் ஜன்மமில்லை. ஜன்மமில்லாமல் கர்மமில்லையென்பது ஸித்தமாகிறது. இது எப்படி உண்டாயிற்று, எது முதலில் ஏற்பட்டது. நமக்கு ஜன்ம ஸம்பந்தம் எப்பொழுது ஆரம்பித்தது, என்றெல்லாம் கேட்க ஆரம்பித்தால் அனாதி ஸித்தமாய் இருந்திருக்கிறதென்றுதான் சொல்லமுடியும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஜன்ம ரூபமான பந்தம் உண்டாயிற்றென்று சொன்னால் அதற்குமுன் மோக்ஷம் இருந்ததென்று சொல்லவேண்டிவரும். நிமித்தமில்லாமல் பந்தம் ஏற்பட்டதென்றும் சொல்லும்படியிருக்கும். ஆகையால், இந்த மாதிரி வீண் வியவஹாரத்தில் புத்தியை செலுத்தாமல் ஸர்வ ஆஸ்திகர்களும் ஒத்துக் கொள்கிறபடி கர்மம் அனாதி ஸித்தமாய் இருந்து வருகிறதென்பதை ஒப்புக் கொள்வதே நியாயமாகும். நமக்கு அநேக ஜன்மங்களாய்விட்டன. இன்னும் அநேக ஜன்மங்கள் வரலாம். இப்படி வரக்கூடிய அநேகவித பிறப்புகளில், எல்லாவற்றையும் பார்க்கிலும் நர ஜன்மா துர்லபமென்று ஸ்ரீமத் ஆசார்யாள் சொல்கிறார்கள்.

இந்த மன்வந்தரத்தில் இருபத்தி எட்டு கலியுகம் ஆகியும் நாம் இன்னும் முக்தராகவில்லையென்பதற்குக் காரணம் கலியுகப் பிரபாவமென்று ஸமாதானம் சொல்லிக் கொள்ளத் தோன்றலாம். ஆனால், அப்படியே இருபத்தி எட்டு க்ருத த்ரேதா, த்வாபர யுகங்களிலும் நாம் இருந்திருக்கிறோமல்லவா? அப்படிப்பட்ட யுகங்களிலும் நமக்கு முக்தி கிடைக்கவில்லையே. த்ரேதா, த்வாபர யுகங்களில் நாம் ஸ்ரீ இராமசந்திர மூர்த்தியையும் ஸ்ரீ கிருஷ்ணபகவானையும் பார்த்திருப்போமல்லவா? அப்படியிருந்தும் அவர்கள் சொன்ன மார்க்கத்தை நம்பாமல், அவர்கள் போன வழியில் போகாமல்,

இன்னும் பத்தர்களாய்த்தானே இருக்கிறோம். ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுனன் ஒருவனுக்காக மாத்திரமா உபதேசம் செய்தார்? ஸர்வ லோக ஹிதார்த்தமாக அல்லவா அது உபதேசிக்கப்பட்டது.

நிமித்த மாத்ரம் பவ, ஸவ்யஸாசின்

என்று அவரே சொல்லியிருக்கிறபடி இவ்விஷயத்திலும் அர்ஜுனன் கேவலம் நிமித்த மாத்திரந்தானே. இப்படி அநேக ஜன்மம் கிடைத்தும் நமக்கு முக்தி வரவில்லையென்றால் என்னவென்று சொல்வது! பிரயத்தனம் இல்லையென்றுதானே சொல்ல வேண்டும்? ஏதோ சிலர் மாத்ரம் முக்தர்கள். மற்றவரெல்லாரும் பத்தர்கள். அவர்கள் சாஸ்திரப்பிரகாரம் பிரயத்தனம் செய்தார்கள், முக்தர்களானார்கள். நாம் அம்மாதிரி செய்யவில்லை, இருந்த மாதிரியே இருந்து கொண்டிருக்கிறோம். மேலும் மேலும் கர்மம் செய்து பாபத்தை ஸம்பாதித்துக் கொண்டிருக்கிறோம். இதைத் தவிர நாம் வேறு என்ன ஸாதித்திருக்கிறோம். இப்படி இருந்து வந்தால் மனுஷ்ய ஜன்மா பசு ஜன்மாவைவிட எப்படி சிலாக்யமாகும்? பசு ஜன்மத்திலோ அந்த ஜன்மாவை எடுத்து துக்கம் அனுபவிப்பதால் முன் செய்த பாபம் தொலைந்து போகிறது. அந்த ஜன்மாவில் கர்மாதிகாரம் இல்லாததினால் வேறு பாபகர்மா செய்யவும் இடமில்லை. ஆகையால், கர்மக்ஷயம் ஏற்படுகிற பசு ஜன்மாவே சிலாக்யமென்று சொல்லலாம். அப்படியிருக்க மனுஷ்ய ஜன்மத்தை ஏன் சிலாகித்தாரென்றால், பசு ஜன்மாக்களுக்கு இல்லாத தர்ம ஸம்பாதனம் என்பதும், அந்த தர்மத்தினால் புண்யமும் பாபக்ஷயமும் ஏற்படுவது முதலான முக்தி ஸாதனவழிகளும் இந்த மனுஷ்ய ஜன்மாவுக்கே இருப்பதால், இந்த மனுஷ்ய ஜன்மா துர்லபமென்று ஸ்ரீமத் ஆசார்யாள் சொல்கிறார்கள்.



தேவலோகம் புண்ய கர்மத்தின் பலனான ஸுகத்தை அனுபவிக்கும் லோகமே தவிர கர்மபூமியல்ல. தேவர்கள் அங்கே கர்மம் செய்து கிரமமாக முக்தியடைய முடியாது. அமிருத பிராசனத்தினால் அவர்களுக்கு பசி தாகம் கிடையாது, ரோகம் கிடையாது. இவ்வித துக்கங்கள் மட்டுமே அவர்களுக்குக் கிடையாது. இதனால் அவர்களுக்கு துக்கமே இல்லையென்று அர்த்தமில்லை. அஸுரர்களினால் உபாதை உண்டு. மற்றும் பலவித துக்கங்களுமுண்டு. யாராவது தபஸ்

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

செய்தால், தங்கள் ஸ்தானத்துக்கு அவன் வந்துவிடப்போகிறானே என்ற பயம் அவர்களுக்கு உண்டாகிறது. அதனால்தான் அநேக விக்னங்களை அவனுக்கு செய்கிறார்கள். அதற்காகத்தான் வேதாந்த கிரந்தங்களை வாசிக்கும் முன்னும் பின்னும் சாந்தி பாடம் சொல்கிறோம். சில தேவர்கள் தானாகவே வேதத்தை அறிந்து ஆத்ம ஞானத்தையடைந்து முக்தியடைகிறார்கள். ஸாமான்யமான மற்ற தேவர்கள் தாங்கள் செய்த புண்யம் தீரும் வரை தேவலோகத்தில் இருந்து ஸுகத்தை அனுபவித்துவிட்டு, ஞானமின்மையால்

க்ஷீணே புண்யே மர்த்ய லோகம் விசந்தி

என்றபடி திரும்பி வந்துவிடுகிறார்கள். லௌகிக திருஷ்டாந்தமாக, ஒரு மனிதன் ஐம்பத்திஐந்து வயதுவரை வேலை செய்ய அனுமதி கொடுத்து, அதுவரை சம்பளம் அதிகாரம் முதலான போகங்களையும் தந்து, அந்த வயசு ஆனதும் உபகாரச் சம்பளம் கொடுத்து வீட்டுக்கு அனுப்புகிற மாதிரி-என்று சொல்லலாம். இந்த லோகத்துக்கு வந்து மறுபடியும் புண்ய கர்மம் செய்து புண்யத்தை ஸம்பாதித்து, பாபகர்மத்தைச் செய்யாமல் விலக்கி, ஸத்கர்மாவை அபிவிருத்தி செய்து, ஈசுவர ஆராதனம் செய்து, சித்தசுத்தியை அடைந்து ஆத்மஞானம் பெற்று, கிரமமாக மோக்ஷத்தை அடைய மார்க்கம் தேடிக்கொள்ளலாம்.

இந்த மாதிரி ஈசுவர ஆராதனம் முதலிய ஸாதனங்களை அனுஷ்டிக்க மனுஷ்யனுக்குத்தான் முடியும். அவனுக்குத்தான் அதிகாரமுண்டு. ஈசுவர ஆராதனத்தால் அடையக்கூடாத பலன் கிடையாது. ஸ்ரீமத் ஆசார்யாள் சிவானந்த லஹரியில்

மனஸ்தே பாதாப்ஜே நிவஸது வச: ஸ்தோத்ரபணிதௌ
கரௌ சாப்யர்சாயாம் ச்ருதிரபி கதாகர்ணனவிதௌ |
தவ த்யானே புத்திர்நயனயுகளம் மூர்த்தி விபவே
பாக்ரந்த்தாந் கைர்வா பரமசிவ ஜானே பரமத: ||

என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி மனது பகவானுடைய பாதங்களிலும், வாக்கு ஸ்தோத்ரம் செய்வதிலும், கைகள் அர்ச்சிப்பதிலும், காதுகள் திவ்ய சரித்திரத்தைக் கேட்பதிலும், புத்தியானது திவ்ய மங்கள ரூப த்யானத்திலும், கண்கள் திவ்ய மங்கள விக்ரஹத்தைப் பார்ப்பதிலும், இருந்து பூஜை செய்தால்தான் அது ஆராதனமெனப்படும். அப்படிச் செய்யாமல் மனதை வேறு

இடத்தில் செலுத்தி, மற்ற இந்திரியங்களும் விக்ஷேபங்களில் சென்று கொண்டிருக்கும்போது செய்யப்படும் பூஜையால் என்ன பிரயோஜனமென்று கேட்கலாம். இந்த பூஜை மிகவும் உன்னத பலனை கொடுக்காமல் போனாலும், பொழுது போக்குவதற்காக சீட்டாடுவதைப் பார்க்கிலும் மேலானதாகும். ஸாமான்யமான பலனையாவது கொடுக்குமல்லவா? இதையாவது ஜனங்கள் செய்யட்டுமே. இல்லாவிட்டால் மனுஷ்ய ஜன்மமே நிஷ்பலமாய்ப் போய்விடுமே. இந்தப் பூஜையையாவது பசுக்கள் செய்ய முடியுமா? உத்ஸவாதிகளைப் பார்க்க முடியுமா? பிரதக்ஷிணமா, நமஸ்காரமா, என்ன செய்ய முடியும்?

ஆஹார நித்ரா பய முக்யகானி
ஸாமான்யமேதத் பசுபிர்நராணாம் |
ஞானம் ஹி தேஷாமதிகோ விசேஷோ
ஞானேன ஹீன: பசுபி: ஸமான: ||

என்றபடி, ஆஹாரம் நித்திரை பயம் முதலியன பசுக்களுக்கும் மனுஷ்யர்களுக்கும் ஒரே மாதிரிதான். நல்லது கெட்டது தெரிந்துகொள்ளும்படியான பகுத்தறிவு என்ற விசேஷ சக்தி ஒன்று மனுஷ்யனுக்கு இருப்பதினாலேதான் அவன் சிரேஷ்டனாகிறான். அது இல்லாமற்போனால் பசுக்களே மேன்மை என்று தோன்றுகிறது. உதாஹரணமாக, ஒரு பசுமாட்டை எடுத்துக்கொள்வோம். அதன் பால் உணவுக்கும் பூஜைக்கும் மருந்துக்கும் உபயோகப்படுகிறது. அதன் பஞ்சகவ்யம் மிகவும் சுத்திக்கு ஹேதுவானது. மஹா பாதகங்களுடைய சாந்திக்கும் உபயோகமாகிறது. கோமயம் மூத்ரம் இரண்டும் வீடு மெழுகவும் புரோக்ஷணாதிகளுக்கும் உபயோகமாகிறது. மனுஷ்யனுடைய மல மூத்ரங்களைப் பார்த்தால், அதனால் ஏற்படும் தோஷ நிவர்த்திக்காக ஸூர்ய தர்சனமோ பிராஹ்மண தர்சனமோ செய்யவேண்டுமென்று சாஸ்திரம் சொல்கிறது. பசுவின் பால் தயிர் வெண்ணெய் நெய் முதலியன ஹோமாதிகளுக்கு உபயோகமாவதும் தவிர, அதன் தோல் பேரிகைக்கும், கோரோசனம் மருந்துக்கும் பூஜைக்கும் உபயோகப்படுகிறது. கொம்பு குளம்பு முதலியனவும் உபயோகமாகின்றன. அதேமாதிரி யானையானது ஆயிரம் ஆட்கள் செய்யக்கூடிய வேலையை அது ஒன்றே செய்கிறது. இறந்த பின்பும் அதன் எலும்பும் தந்தங்களும் உபயோகமாகின்றன. மிருகங்களிடத்தில் இவ்வளவு உபயோகமிருந்தும், மனுஷ்யன் சிரேஷ்டனானது எப்படியென்றால், அவனுக்கு விசேஷமாய் இருக்கும் ஞானத்தினாலேதான் என்று சொல்லவேண்டும். அந்த ஞானமோவென்றால் தர்மாதர்ம ஞானம். இதில்லாமல்

போய்விட்டால் அந்த மனுஷ்யன், மனுஷ்யனல்லவென்றே சொல்லவேண்டும். ஞானமில்லாதவன் பசுக்களுக்கு ஸமானமென்று சொல்லப்படுகிறது. ஆனால் மனுஷ்ய ஜன்மத்தை அடைந்துங்கூட எவன் ஞானம் ஸம்பாதித்துக் கொள்ளவில்லையோ, அவனை விட பசுவே சிரேஷ்டமென்று சொல்லவேண்டும்.

அபி மானுஷ்யகம் லப்த்வா பவந்தி ஞானினோ ந யே |
பசுதைவ வரம் தேஷாம் ப்ரத்யவாயாப்ரவர்த்தனாத் ||

பசுக்களுக்கு கர்மாதிகாரமே இல்லாததினால், பாபமோ தோஷமோ ஏற்பட நியாயமில்லை. மனுஷ்யன் கர்மத்தில் அதிகாரம் பெற்றவனானபடியால் அவனுக்கு அவை உண்டு.

ஞான ஸம்பாதனம் தேவதைகளுக்குக் கூட ஸாத்யமில்லை, மனுஷ்யனுக்குத்தான் ஸாத்யமென்று சொன்னோம். ஏனென்றால், ஞானத்துக்கு வைராக்யம் தான் முக்ய ஸாதனம். இந்த வைராக்யம் தேவர்களுக்கு வருவது துர்லபம். ஸதா ஸுகமாக இருப்பவர்களுக்கு வைராக்யம் எப்படி வரும்? துக்கம் யாருக்கு இருக்கின்றதோ, அவர்களுக்கு வருமே தவிர, ஸுகியாயிருப்பவனுக்கு வைராக்யம் வருவது மிகவும் கஷ்டம். ஸாதாரணமாய் துக்கிகளுக்குத்தான் இந்த வைராக்யம் ஏற்படும். உதாஹரணமாக வாழைக்காயோ மாங்காயோ பழுக்க வேண்டுமானால் வைக்கோலால் மூடியோ மூட்டம் வைத்தோ நாம் பழுக்க வைக்கிறோமல்லவா? அதேமாதிரி, ஸாமான்யமாய் இந்த உலகத்தில் துக்கப்பட்டவர்களுக்குத்தான் வைராக்யம் வருவதைப் பார்த்திருக்கிறோம். ஏதோ சிலருக்கு மட்டும் ஜன்மாந்தர ஸுகிருதத்தினால் துக்கானுபவமில்லாமலே ஏற்படுவதும் உண்டு. "

பாலனாய் இருக்கும்போது யதேச்சையாய் விளையாட்டில் புத்தியை செலுத்திக்கொண்டு துக்கமே அனுபவிக்காமல் காலம் சென்றுவிடுகிறது. அந்தக் காலத்தில் வைராக்யம் உண்டாகிறதா? யௌவனத்தில் காமத்தினால் பீடிக்கப்பட்டு, உன்மத்தன்போல அலைந்து திரிந்து கொண்டிருக்கிறான். அப்போதும் அவனுக்கு வைராக்யம் வருகிறதில்லை. ஞானஸாதனமான வைராக்யம் வரும்போது விருத்தனாகி விடுகிறான். சரீரத்தில் ஸாமர்த்யம் குறைந்துபோய் விடுகிறது. வைராக்யம் வந்த காலத்தில் அதை உபயோகித்து ஸத்கதி அடைய பிரயத்னம் செய்ய முடிகிறதில்லை. இப்படியேதான் இந்த இருபத்திஎட்டு சதுர் யுகங்களிலும், நாம் பிறந்தும் இறந்தும் இருந்து வந்திருக்கிறோம். வைராக்யத்தை தகுந்த காலத்தில் ஸம்பாதிக்காத

காரணத்தினால் நமக்கு ஞானம் இதுவரை ஏற்படவில்லை. தேவர்கள் அமரர்கள், அதாவது இறப்பு அற்றவர்கள்; அஜரர்கள், அதாவது மூப்பு அற்றவர்கள். ஆகையால், அவர்களுக்கு ஞான ஸாதனமான வைராக்யம் வருவது மிகவும் துர்லபம். அவர்களுக்கு கர்மாதிகாரம் உண்டென்று வைத்துக் கொண்டாலும், அவர்களுக்கு வைராக்யம் உண்டாவது மிகவும் கஷ்டமானதினால், தேவஜன்மாவைப் பார்க்கிலும் மனுஷ்ய ஜன்மமே சிலாத்யமென்று தெரிவதற்காகத்தான் எல்லா ஜன்மங்களிலும் மனுஷ்ய ஜன்மா துர்லபமென்று ஸ்ரீமத் ஆசார்யாள் சொல்கிறார்கள். சாகிற காலத்திலாவது பகவந் நாம ஸ்மரணம் செய்தால் கிருதார்த்தராகலாம் என்ற நியாயத்தை தேவர்கள் அமரர்களாகையால் உபயோகப்படுத்திக் கொள்ள முடியாது. அகஸ்மாத்தாக உச்சரித்த பகவந்நாமாவினுடைய மஹிமையைப் பற்றி, ஸ்ரீமத் பாகவதம் அஜாமிள உபாக்யானத்தில் சொல்லியிருக்கிறதல்லவா? இந்த அந்தியகால ஸ்மிருதி கூட தேவர்களுக்கில்லை யாதலால், நரஜன்மமே விசேஷமென்று துலங்குகிறது.

எல்லோரும் தங்களுக்கு துக்கம் வரக்கூடாது என்றே விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் அது வராமலிருக்கும் வழியைத் தெரிந்து கொள்வதில்லை. அதர்மம் செய்தால் துக்கம் வந்தே தீரும். வந்திருக்கும் துக்கத்திற்காக அழாமல், இனிமேல் துஷ்கர்மா செய்யாமல் தடுத்துக்கொண்டு நல்வழியில் செல்லும்படி நம்மை திருத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் அந்த துக்கமே நமக்கு ஒரு குரு போலாகிறது. ஆகவே துக்கம் நமக்கு நல்வழிக்கு ஸாதனமாக ஆகிறது. ஸத் கர்மாவில் நம்மை பிரவர்த்திக்கச் செய்து படிப்படியாக கடவுளையும் காட்டிக் கொடுக்கிறது. ஆகையால் இந்த சிக்ஷா ரூபமான துக்கமாகிற குரு இருந்தால் நாம் ஸந்தோஷப்படவேண்டியதேயாகும். துக்கம் அனுபவித்ததினால் துஷ்கர்மத்தின் பலன் அந்த அனுபவ



ஸ்ரீசந்திரசேகரபாரதீஸ்வாமிகள்.

மூலமாக நாசமடைவதுடன், இனிமேல் அவ்வித கர்மம் செய்யாமலிருக்கும்படி புத்திக்குத் தெளிவையும் கொடுத்து ஸத்கர்மத்தில் பிரவிருத்தியையும் உண்டாக்குகிறது. துக்கம் யாவருக்கும் உண்டு. ராஜாவுக்கும், விரோதிகளினாலும் வியோகங்களினாலும் துக்கம் ஏற்படுவதைப் பார்க்கிறோம். பசுக்களிடத்திலும் துக்கம் ஏற்படுவதைப் பார்க்கிறோம். அந்த ஜன்மா துக்கமயமே என்று கூடச் சொல்லலாம். நம்மிடத்திலும் துக்கம் இருக்கிறது. நிஷித்த கர்மாக்களைச் செய்தால் கெட்ட ஜன்மா கிடைக்கிறது. விஹித கர்மாக்களைச் செய்தால் நல்ல ஜன்மா கிடைக்கும். கெட்டதோ, நல்லதோ, ஜன்மா என்பது கர்மானுஸாரமாய்த்தான் வரும். நமக்கே துக்கமில்லாமல் போனாலும், துக்கப்படுகிறவர்களைப் பார்த்து நமக்கு துக்கம் உண்டாகிறதல்லவா? சரீர ஸம்பந்தம் இருக்கும் வரையில் துக்கம் இருந்துகொண்டே இருக்கும். கர்ம ஸம்பந்தமும் விடாது. சரீர ஸம்பந்தம், கர்ம ஸம்பந்தம் இருக்கும் வரை மோக்ஷம் வர இடமில்லை. ஞானம் வந்தால்தான் ஜன்மம் இல்லாமல் போகும். ஜன்மம் இல்லாமல் போனால்தான் சரீர கர்ம ஸம்பந்தம் ஒழியும். இந்த ஸம்பந்தத்தை ஒழிக்க நரஜன்மாவைப்போல் அனுகூலமான வேறு ஜன்மா கிடையாதென்று ஸ்ரீமத் ஆசார்யாள் சொல்கிறார்கள். மேலும் நமக்கு வயதாகி விட்டதே, காலம் போய் விடுகிறதே என்ற துக்கம் உண்டாகி, வைராக்யம் ஏற்பட ஹேது இருக்கிறது. தேவர்கள் அஸ்வப்நர்கள் அதாவது தூக்கமேயில்லாதவர்கள் என்பதால் அவர்களுக்கு காலம் போவது தெரியாது. அவசரப்பட வேண்டிய அவசியமும் தோன்றாது. இந்தக் காரணத்தைக் கொண்டும், மனுஷ்ய ஜன்மாவே தேவ ஜன்மாவைக்காட்டிலும் சிரேஷ்டம்.

ஆனால் இந்த சிரேஷ்டமான ஜன்மம் எடுத்தும் தகுந்தபடி பிரயத்னம் செய்து பிரயோஜனப்படுத்திக் கொள்ளாமல் போனால், ஈசுவரன் மறுபடியும் நமக்கு இந்த மனுஷ்ய ஜன்மாவை எப்படிக் கொடுப்பார்? ஒரு பிராஹ்மணன் ஒரு ராஜாவினிடம் போய் யாகத்திற்கென்று யாசித்து வாங்கிய பணத்தை தன் பார்யைக்கு வஸ்திர ஆபரணாதிகளில் செலவழித்துவிட்டு மறுபடியும் அந்த ராஜாவினிடம் போய் பணம் கேட்டால் எப்படிக் கிடைக்கும்? அதே மாதிரி ஒருதரம் கிடைத்த மனுஷ்ய ஜன்மாவை வீணாக்கி விட்டால், மறுபடி எப்படி அதே ஜன்மாவைக் கொடுக்கும்படி நாம் ஈசுவரனைக் கேட்க முடியும்? ஈசுவரன் நம்மை செய்யும்படி சொல்லியிருக்கிற கார்யங்களைச் செய்தால், அவருக்கு நம்மிடம் தயை பிறக்கும். அவைகளைச் செய்யாமல் இருப்பதுடன், செய்யாதே என்று அவர் தடுத்ததையும் செய்தால், அவர் நம் முகத்தைப் பார்க்கக்கூட விரும்பமாட்டார். ஒரு தரித்திரனுக்கு குடும்ப ஸம்ரக்ஷணைக்காக கொடுத்த

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

திரவ்யத்தை அவன் சூதாடித் தோற்றுவிட்டால் அந்தப் பணத்தினால் அவனுக்கு என்ன பிரயோஜனம்? அப்படியே, துர்லபமான மனுஷ்ய ஜன்மத்தைப் பெற்று ஆஹார வியவஹாராதிகளில் கழித்துவிட்டால், என்ன பிரயோஜனமுண்டு? இந்த வியவஹாராதிகளுக்கு மனுஷ்ய ஜன்மா வேண்டுமா? பிராஹ்மண ஜன்மா வேண்டுமா? ஸாமான்ய ஜன்மாக்கள் போதாதா? மேலான பதவிகளுக்குப் போவதற்கு ஸாதனமாகக் கிடைத்த இந்த ஜன்மாவை அபோஜ்ய போஜனத்தாலும் அபேய பானத்தாலும் கெடுத்துக் கொள்வது உசிதமாகுமா?

Our Website link : https://voiceofjagadguru.com/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்